# தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்

19–A, ருக்மினி லட்சுமிபதி சாலை, (டிட்கோ வளாகம்), எழும்பூர், சென்னை 600 008.
தொலைபேசி .28411376, 28411378, 28411379 / தொலை நகல் : 28411377
email: tnerc@vsnl.net Website: www.tnerc.tn.nic.in


எண். 03/ 2009
மார்ச் 19 , 2009.

## செய்திக் குறிப்பு

2009–10 ஆம் நிதியாண்டிற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு அரசால் வழங்கப்பட வேண்டிய மானியம் ரூ.1672.17/– கோடி என தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயம் செய்துள்ளது. இது நடப்பு ஆண்டிற்கான மானியத் தொகையை விட ரூ.105/– கோடி அதிகமாகும்.

ஒழுங்குமுறை ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட கட்டண வீதத்தை விட குறைவான வீதத்தை நடைமுறைப்படுத்த அரசு முடிவு செய்யுமானால், 2003ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் 65ஆம் பிரிவின்படி அரசு மின்சார வாரியத்திற்கு மானியம் வழங்க வேண்டும்.

வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்கு மின்கட்டண வீதத்தில் ஒரு பகுதி அதாவது, ஒரு யூனிட்டிற்கு 35 காசுகள் முதல் ஒரு யூனிட்டிற்கு ரூ.1.75 வரை உதவித்தொகை அளித்துவரப்பட்டுள்ளது. குடிசைவாசிகள் மற்றும் விவசாயிகளுக்கு முழுவதுமாக மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

மொத்த மானியத் தொகையான ரூ.1672.17/– கோடியில் 76 விழுக்காடான ரூ.1270/– கோடி வீட்டு மின் உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 விழுக்காடான ரூ.263/– கோடி விவசாய மின் உபயோகிப்பாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 8 விழுக்காட்டுத் தொகையான ரூ.139/– கோடி குடிசை மின் உபயோகத்திற்காகவும், விசைத்தறி மற்றும் கைத்தறி மின் உபயோகத்திற்காகவும், தெருவிளக்குகள் மற்றும் பொது குடிநீர் வழங்கல் மின் உபயோகத்திற்காகவும், பொது வழிபாட்டிடங்கள் மின் உபயோகத்திற்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**இரா. பாலசுப்பிரமணியன்**
செயலாளர்